Written by Administrator
Saturday, 13 June 2009 11:45 -

□□□□□□□□ **12.06.2009**

சாதனை!

ராமேஸ்வரம் வரை சென்றது காவிரி தண்ணீர்

துவங்கியது ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம்

-நமது சிறப்பு நிருபர்-

தமிழகத்திலேயே வறண்ட மாவட்டமான ராமநாதபுரத்திற்கு குடிநீர் வழங்கும் 616 கோடி ரூபாய் மதிப்பிலான காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் நேற்று முதல் செயல்பட்டத் துவங்கியது. ராமேஸ்வரம் தீவிற்கும் காவிரி நீர் பாய்ந்து வரலாற்று சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம், 15 லட்சத்து 75 ஆயிரத்து 682 பேர் குடிநீர் வசதியை பெற்றுள்ளனர். திருச்சி அருகே காவிரி ஆற்றில் இருந்து இந்த திட்டத்துக்காக தண்ணீர் எடுக்கப்பட்டு 198 கி.மீ., தூரத்திற்கு குழாய் வழியாக ராமேஸ்வரம் வரை கொண்டு வரப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க காவிரி ஆற்றினை நீராதாரமாக கொண்டு புதிய திட்டம் துவங்க முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2007 ஜனவரி 30ம் பரமக்குடியில் அடிக்கல் நாட்டப்பட்டு 616 கோடி ரூபாய் செலவில் ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் துவங்கின. துவக்க விழாவில் கலந்து கொண்ட முதல்வர் கருணாநிதி கூறுகையில், "மூன்று ஆண்டுகளில் இத்திட்டம் நிறைவடையும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இரண்டு ஆண்டில் முடித்துக் கொடுத்தால் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிசளித்து பாராட்டுவேன்" என்றார்.

இத்திட்டத்தின் மீது முதல்வருக்கு இருந்த ஆர்வத்தை அறிந்த துணை முதல்வர் ஸ்டாலின் குடிநீர் திட்டப் பணிகளை விரைவுபடுத்து மாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். பணிகள் சிறைவடைந்து தண்ணீர் பாய்ந்துள்ள நிலையில் 150 ஆண்டுகால ராமநாதபுரத்தின் தாகத்துக்கு தீர்வு கிடைத்துள்ளது.

ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்ட துவக்க விழா, ராமநாதபுரம் போலீஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடத்தது. சென்னையில் இருந்து 'வீடியோ கான்ফரன்ஸ்' மூலம், முதல்வர் கருணாநிதி துவக்கி வைத்தார்.

ராமநாதபுரத்தில் நடத்த விழாவில் பங்கேற்ற துணை முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், "ராமநாதபுரம் கூட்டுக் குடிநீரானது, ராமேஸ்வரத்தில் உள்ள 53 புனித தீர்த்தங்களுடன் ஒப்பிடும்போது, 24வது தீர்த்தமாக அமையும்," என்றார்.

இந் திட்டத்தால் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த ஐந்து நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் 14 ஒன்றியங்களை சேர்ந்த 3,163 ஊரக குடியிருப்புகள் என 15 லட்சத்து 75 ஆயிரத்து 682 பேர் பயன்பெறுகின்றனர்.

வரும் 2036ம் ஆண்டு உச்சகட்ட மக்கள் தொகையான 20 லட்சம் நபருக்கு தேவையான 10 கோடி லிட்டர் குடிநீர் கிடைக்க வசியாக இந்தி மாவட்டம் முத்தாரகல்லூரில் மூன்று, கடலாகுறிச்சியில் ஒன்று என நீர் சேகரிப்பு கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. 119 ஊரமட்ட நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டு புதிதாக அமைக்கப்பட உள்ள 61 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 198 கி.மீ., நீளமுள்ள பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப் படும்.

தற்போது இனார் தேவையான ஐந்து கோடி லிட்டர் நீர் எடுத்து மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கிணற்றில் இருந்து பெறப் படும் நீர் தலைமை பணிமனையில் இருந்து 20 லட்சம் லிட்டர் மற்றும் ஐந்து லட்சம் லிட்டர் தரமைட்ட நீர் சேகரிப்பு தொட்டிகளில் சேகரிக்கப் படும். அங்கிருந்து நீர் ஏற்றும் குழாய்கள் மூலம் அனைத்து நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் விநியோகிக்கப் படுகிறது.

முதற்கட்டமாக ராமநாதபுரம், ராமேஸ்வரம், பரமக்குடி, கீழக்கரை ஆகிய நகராட்சிகளுக்கும், மண்டபம், சாயல்குடி, முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் ஆகிய பேரூராட்சிகளுக்கும் நேற்று முதல் குடிநீர் வழங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக 30 நாட்களுக்குள் மற்ற பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட உள்ளது.

ராமநாதபுரத்தில் நடந்த கூட்டுக்குடிநீர் திட்ட துவக்க விழாவில் துணை முதல்வர் ஸ்டாலின் பேசினார். அருகில் இடமிருந்து தலைமை செயலாளர் ஸ்ரீபதி, அரசு செயலர்கள் தீனபந்து, நிரஞ்சன் மார்டி, குடிநீர் வடிகால் வாரிய தலைவர் ஸ்வரன் சிங், கலெக்டர் வாகனி .